உ

சிவமயம்

நடுநாட்டுப் பாடல் பெற்ற தலங்கள்

(தேவாரப் பதிகங்களும் தல வரலாறுகளும்)

(இரண்டாவது யாத்திரை)

14. திருவெண்ணெய் நல்லூர் : 19. திருமுண்டீச்சரம்

15. திருத்துறையூர் : 20. திருப்புறவார் பனங்காட்டூர் ;

21. திருவாமாத்

தொகுத்தவர்

சித்தாந்த வித்தகா

கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்

தருமபுர ஆதின சமயப் பிரசார நிலையம்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம்

18-6-61—ஞாயிற்றுக்கிழமை

மேயர் & கம்பெனி (பிரபல மருந்து வியாபாரிகள்)

16, ஐயாபிள்ளை தெரு, சென்னை-3.

திரு. ர. மாசிலாமணி முதலியார் அவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.

உ

சிவமயம்

முகவுரை

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.

மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

1. என்ற ஆன்றோர் வாக்கைக் கடைப்பிடித்துத் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம். வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்படிச் சென்ற 13, 14—5—61 ஆம் நாட்களில் சென்னை வாசிகளாகிய நம்மை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு தனி உந்தூர்தியில் அழைத்துச் சென்று நடுநாட்டுத் தலங்களாகிய திருவதிகை வீரட்டம், திருநாவலூர், அப்பர் சுவாமிகள் திருவவதாரத்தலமாகிய திருவாமூர், திருமுண்டீச்சுரம் திருவெண்ணெய் நல்லூர் ஆகிய 4 பாடல் பெற்ற தலங்களையும் ஒருவைப் புத்தலத்தையும் சிறப்பாகத் தரிசனம் செய்வித்து உதவி னூர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கென ஒரு சிறு நூலும் அப்போது அன்பர்கள் வசதிக்காக அச்சிடப்பெற்று இலவச மாக வழங்கப் பெற்றதும் நினைவிருக்கும். ஆனால் அந்நூலில் திருவதிகை வீரட்டானம், திருநாவலூர் ஆகிய இருபாடல் பெற்ற தலங்களில் சமயசாரியமூர்த்திகள் பாடியருளிய பதிகங்களை மட்டும் அச்சிட்டு வழங்கினோம்.

2. ஆயினும் அன்பர்கள் அப்போதே திருமுண்டீச்சுரம், திருவெண்ணெய் நல்லூரையும் தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தபடி யால் அவற்றையும் தரிசித்து வந்தார்கள். அவ்விருதலங்களில் சமயாசாரியர்கள் பாடியுள்ள பதிகங்களையும், அவ்வத்தலங்களின் வரலாறுகளையும் இந்நூலில் முதற்கண் சேர்த்துள்ளேன். அன்பர் கள் இவற்வறயும் தற்போது ஓதி உய்வார்களாக!

3. இனி, இம்மாதம் நடைபெற விருக்கின்ற தலயாத்திரையில் தரிசிக்கவிருக்கும் தலங்களின் வரலாறுகளையும், ஆங்காங்கு சமயாசாரியர்களின் திருப்பதிகங்களையும் அச்சிட்டு வெளியிடுகின்றேன். இவற்றையும் சுவாமி தரிசனத்தின்போது ஓதிச் சிவபெருமான் திருவருளுக்குப் பாத்திரராவார்களாக!

4. இந்நூல் வெளிவருவதற்குக் காரணராக விளங்கும் நம் மதிப்பிற்குரிய ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும், விளம்பரங்கள் மூலம் பொருளுதவி புரிந்த என் ஆப்த நண்பர் திரு ர. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கும், இதனை உரிய காலத்தில் நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த "பாரி அச்சகத்தார்க்கும்" என் நன்றி உரியதாகுக!

வாழ்க சைவம்! வாழ்க சீரடியாரெல்லாம்!!

இங்ஙனம்,

சென்னை - 5
(16-6-61)

கயப்பாக்கம் - சோமசுந்தரம்.

உ

சிவமயம்

14. திருவெண்ணெய் நல்லூர்

சுந்தரமூர்த்தி நாயனுர்

7-ந் திருமுறை பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடி பெருமானேஅரு ளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேன்என லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட்
டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேன்என லாமே. 3

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன் பெற்றமூர்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக் கிறிக்கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறும் பண்டம்மது பணியாய்
ஆதன்பொருள் ஆனேனறி வில்லேனரு ளாளா

தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. 5

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்மெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 6

ஊனாயுயிர் ஆனாயுடல் ஆனாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்மெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 8

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 9

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

தலவரலாறு :

இத்தலம் நடுநாட்டுத் தலங்கள் 22, உள், 14 ஆவதாகத் திகழ்வது. இத்தலத்திலுள்ள கோயிலுக்குத் திருவருட்டுறை

யென்று பெயர். இக்குறிப்பைப் பதிகத்துட் காண்க. இங்கு ஆதி சைவப் பிராமண குலத்தில் சடையனுருக்கும் இசை ஞானியாருக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரஞ்செய்து, சமீபத்திலுள்ள புத்தூரில் வசித்த சடங்கவி சிவாசாரியரது புத்திரியாரைத் திருமணம் செய்து கொள்ளச் சென்றபோது பரமசிவன் முன் திருக்கயிலையில் அருளியபடி விருத்த வேதியராய்த் தோன்றி அத்திருமணத்தைத் தடுத்துச் சுந்தரரை ஆண்டு கொண்டார். அப்புத்தூர் தற்காலம் மணம் தவிர்ந்த புத்தூர்* என வழங்குகிறது.

சைவ சந்தாநுசாரியமூர்த்திகளாகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனுர் இங்கு எழுந்தருளியிருந்து சிவஞான போதம் உபதேசித்தருளினுர். இவருக்கு அருள்புரிந்த பொல்லாப் பிள்ளையாரும் இங்கு எழுந்தருளி யிருக்கிருர். இத்தலத்திற்குப் பதிகம் 1.

சுவாமிபெயர். தடுத்தாட்கொண்ட நாதர்; கிருபாபுரீசுவரர்; வேணுபுரீசுவரர். தேவியார்: வேற்கண்ணியம்மை; மங்களாம்பிகை. தீர்த்தம்: பெண்ணையாறு.

இங்கு வழக்குவென்ற அம்பலம் என வழங்கும் பழுதடைந்த நூற்றுக்கால் மண்டபமுமுள்ளது. இத்தலத்திற்கு இராசப்ப நாவலர் அருளிய "வெண்ணெய்க் கலம்பகம்" என்ற ஒரு நூலுமுண்டு.

வழி: இது விழுப்புரம் - திருச்சி, குறுக்குப் பாதையில் உள்ள 'திருவெண்ணெய்நல்லூர் ரோடு, ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே 4 மைலில் உள்ளது. [பண்ருட்டிக்கு மேற்கே 15 மைலிலும், விழுப்புரத்திலிருந்து 12மைலிலும், திருக்கோவலூரிலிருந்து 14 மைலிலும் உள்ளது.]

---

* *இது தற்போது மணம் வந்த புத்தூர் எனவும் வழங்கப் பெறுகிறது: இதனையும் நம் குழுவினர் தரிசித்தனர்.*

உ
சிவமயம்

14. திருமுண்டீச்சரம்

திருநாவுக்கரசு நாயனர்

திருத்தாண்டகம் – ஆருந்திருமுறை

திருச்சிற்றம்பலம்.

ஆர்த்தான்கா ணழகனை மறைக்கு நாணு
அடியவர்கட் கன்பன்கா ணனைத் தோலைப்
போர்த்தான்காண் புரிசடைமேற் புனலேற் றன்காண்
புறங்காட்டி லாடல் புரிந்தான் றன்காண்
காத்தான்கா ணுலகேழுங் கலங்கா வண்ணம்
கனைகடல்வாய் நஞ்சதனைக் கண்டத் துள்ளே
சேர்த்தான்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 1

கருத்தன்காண் கமலத்தோன் தலையி லொன்றைக்
காய்ந்தான்காண் பாய்ந்தநீர் பரந்த சென்னி
ஒருத்தன்கா ணுமையவளோர் பாகத் தான்காண்
ஒருருவின் மூவுருவா யொன்ருய் நின்ற
விருத்தன்காண் விண்ணவர்க்கு மேலா னன்காண்
மெய்யடியா ருள்ளத்தே விரும்பி நின்ற
திருத்தன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 2

நம்பன்கா ணரைவிடையொன் றேறி னன்காண்
நாதன்காண் கீதத்தை நவிற்றி னன்காண்
இன்பன்கா ணிமையாமுக் கண்ணி னன்காண்
ஏசற்று மனமுருகு மடியார் தங்கட்கு
அன்பன்கா ணரழல தாடி னன்காண்
அவனிவனென் றியாவர்க்கு மறிய வொண்ணுச்
செம்பொன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 3

மூவன்காண் மூவர்க்கு முதலா னுன்காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவா னுன்காண்
காவன்கா னுலகுக்கோர் கண்ணு னுன்காண்
கங்காளன் காண்கயிலை மலையி னுன்காண்
ஆவன்கா ணுவகத்தஞ் சாடி னுன்காண்
ஆரழலா யயற்கரிக்கு மறிய வொண்ணுத்
தேவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 4

கானவன்காண் கானவனுய்ப் பொருதான் ருன்காண்
கனலாட வல்லான்காண் கையி லேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயி னுன்காண்
வல்லேறென் றதுவேற வல்லான் ருன்காண்
ஊனவன்கா ணுலகத்துக் குயிரா னுன்காண்
உரையவன்கா ணுணர்வவன்கா ணுணர்ந்தார்க் கென்றும்
தேனவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 5

உற்றவன்கா ணுறவெல்லா மாவான் ருன்காண்
ஒழிவற நின்றெங்கு முலப்பி லான்காண்
புற்றரவே யாடையுமாய்ப் பூணு மாகிப்
புறங்காட்டி லெரியாடல் புரிந்தான் ருன்காண்
நற்றவன்கா ணடியடைந்த மாணிக் காக
நணுகியதோர் பெருங்கூற்றைச் சேவ டியினுல்
செற்றவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 6

உதைத்தவன்கா ணுணராத தக்கன் வேள்வி
புநண்டோடத் தொடர்ந்தருக்கன் பல்லை யெல்லாம்
தகர்த்தவன்காண் தக்கன்றன் றலையைச் செற்ற
தலையவன்காண் மலைமகளா முமையைச் சால
மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார் வேள்வி
வந்தவியுண் டவரோடு மதனை யெல்லாம்
சிதைத்தவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 7

உரிந்தவுடை யார்துவரா லுடம்பை மூடி
யுழிதருமவ் வூமரவ ருணரா வண்ணம்
பரிந்தவன்காண் பனிவரைமீப் பண்ட மெல்லாம்
பரித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரந்துவரு மிருகரையுந் தடவா வோடி
நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 8

.... 9

அறுத்தவன்கா ணடியவர்க ளல்ல லெல்லாம்
அரும்பொருளாய் நின்றவன்கா ணநங்க னுகம்
மறுத்தவன்காண் மலைதன்னை மதியா தோடி
மலைமகடன் மனநடுங்க வானோ ரஞ்சக்
கறுத்தவனுய்க் கயிலாய மெடுத்தோன் கையுங்
கதிர்முடியுங் கண்ணும் பிதுங்கி யோடச்
செறுத்தவன்காண் திருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே. 10

திருச்சிற்றம்பலம்.

தலவரலாறு :

இது தற்காலம் திருக்கிராமம் என்று வழங்குகிறது. பிரம தேவனும், இந்திரனும் பூசித்துப் பேறுபெற்ற சிறப்புடையது. சிறிய கோயில். கருங்கல் திருப்பணி அண்மையில் செய்யப்பட்டுள்ளது. (இத்தலத்தோடு நெல்லிக்குப்பத்துக்கு வடமேற்கே உள்ள சிவாலயத்தைக் கண்டு மயங்குவர். கயப்பாக்கம். சதாசிவ செட்டியார், பி. ஏ., அவர்கள் குறிப்பு.) இதற்குப் பதிகம் 1.

சுவாமி பெயர் : முண்டீசுவரர் ; சிவலோகநாதர்.

தேவியார் : கானார்குழலியம்மை.

வழி : இத்தலம் திருவெண்ணெய்நல்லூர் ரோடு ரயில் நிலையத்திலிருந்து திருவெண்ணெய் நல்லூர் செல்லும் வழியில் ஒரு மைலில் உள்ளது.

உ

சிவமயம்

15. திருத்துறையூர்

சுந்தரமூர்த்தி நாயனூர்

பண். தக்கராகம் - ஏழாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

மலையா ரருவித் திரண்மா மணியுந்திக்.....................
குலையாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கலையா ரல்குற்கன் னியராடும் துறையூர்த்
தலைவா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 1

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தம் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 2

கந்தங் கமழ்கா ரகில்சந் தனமுந்திச்
செந்தண் புனல்வந் திழிபெண்ணை வடபால்
மந்தி பலமா நடமாடுந் துறையூர்
எந்தாய் உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 3

அரும்பார்ந் தனமல் லிகைசண் பகஞ்சாடிச்
சுரும்பாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கரும்பார் மொழிக்கன் னியராடுந் துறையூர்
விரும்பா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 4

பாடார்ந் தனமாவும் பலாக்க ளும்சாடி
நாடார வந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
மாடார்ந் தனமாளிகை சூழுந் துறையூர்
வேடா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 5

மட்டார் மலர்க்கொன் றையும்வன்னி யுஞ்சாடி
மொட்டாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
கொட்டாட் டொடுபாட் டொலியோவாத் துறையூர்ச்
சிட்டா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 6

மாதார் மயிற்பீ லியும்வெண் ணுரையுந்தித்
தாதாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
போதார்ந் தனபொய்கை கள்சூழுந் துறையூர்
நாதா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7

கொய்யா மலர்க்கோங் கொடுவேங்கை யுஞ்சாடிச்
செய்யாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
மையார் தடங்கண் ணியராடும் துறையூர்
ஐயா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 8

விண்ணார்ந் தனமேகங்கள் நின்று பொழிய
மண்ணாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்
பண்ணார் மொழிப்பா வையராடுந் துறையூர்
அண்ணா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 9

மாவாய்ப் பிளந்தானும் மலர்மிசை யானும்
ஆவா வவர்தேடித் திரிந்தல மந்தார்
பூவார்ந் தனபொய் கைகள்சூழுந் துறையூர்த்
தேவா வுனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 10

செய்யார் கமலம் மலர்நாவ லூர்மன்னன்
கையால் தொழுதேத்தப் படுந்துறை யூர்மேல்
பொய்யாத் தமிழூரன் உரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறி தானே. 11

திருச்சிற்றம்பலம்.

தலவரலாறு:

இத்தலம் தற்காலம் திருத்தலூர் எனவும், திருத்தளூர் எனவும் வழங்குகிறது. இங்கு சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்ணெய் நல்லூரினின்றும் வந்து தவநெறியைத் தரவேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்தித்துக்கொண்டார். சைவசந்தானசார்ய சுவாமிகளுள் ஒருவரான சகலாகம பண்டிதராக விளங்கிய அருணந்தி சிவாசார்ய சுவாமிகள் திருவவதாரஞ் செய்த தலம்.

சுவாமி பெயர்: துறையூர்நாதர்; தேவியார்: பூங்கோதை நாயகி: தீர்த்தம்: பெண்ணை. இதற்குப் பதிகம் 1.

வழி: இத்தலம் விழுப்புரம் மெயின்லைனில் திருத்துறையூர் ரயில் நிலையத்திலிருந்து ஒரு மைலில் உள்ளது. பண்ருட்டியி லிருந்து வடமேற்கே ஐந்து மைல்.

சிவமயம்

20. திருப்புறவரர் பனங்காட்டூர்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

பண். சீகாமரம் – 2-ங் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விண்ணமர்ந்தன மும்மதில்களை வீழவெங்கணை யாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொரு பாகமாகிய பிஞ்ஞகாபிறை சேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந் தார்க்கருளாயே. 1

நீடல்கோட லலரவெண்முல்லை நீர்மலர்நிரைத் தாதளஞ்செயப்
பாடல் வண்டறையும் புறவார் பனங்காட்டூர்த்
தோடிலங்கிய காதயன்மின் றுளங்கவெண்குழை துள்ளநள்ளிருள்
ஆடுஞ்சங்கரனே யடைந் தார்க்கருளாயே. 2

வாளையுங்கய லும்மிளிர் பொய்கை வார்புனற்கரை யருகெலாம்
பாளையொண்கமுகம் புறவார் பனங்காட்டூர்ப் [வயற்
பூளையுந்நறுங் கொன்றையும்மத மத்தமும்புனை வாய்கழலிணைத்
தாளையேபரவுந் தவத் தார்க்கருளாயே. 3

மேய்ந்திளஞ் செந்நெல் மென்கதிர்கவ்வி மேற்படுதலின்
மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப் புற வார்பனங்காட்டூர்
ஆய்ந்தநான்மறை பாடியாடு மடிகளென்றென் றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந் தவத் தார்க்கருளாயே. 4

செங்கயல்லொடு சேல்செருச்செயச் சீரியாழ்முர றேனினத்தொடு
பங்கயம்மலரும் புற வார்பனங்காட்டூர்க்
கங்கையும்மதி யுங்கமழ்சடைக் கேண்மையாளொடுங்
கூடிமான்மறி
அங்கையாடலனே யடி யார்க்கருளாயே. 5

நீரினார்வரை கோலிமால்கட னீடியபொழில் சூழ்ந்து வைகலும்
பாரினார்பிரியாப் புற வார்பனங்காட்டூர்க்
காரினார்மலர்க் கொன்றைதாங்கு கடவுளென்றுகை கூப்பி
நாடொறும்
சீரினால்வணங்குந் திறத்தார்க் கருளாயே. 6

கையரிவையர் மெல்விரல்லவை காட்டியம்மலர்க் காந்தளங்குறி
பையராவிரியும் புற வார்பனங்காட்டூர்
மெய்யரிவையொர் பாகமாகவு மேவினாய்கழ லேத்திநாடொறும்
பொய்யிலாவடிமை புரிந் தார்க்கருளாயே. 7

தூவியஞ்சிறை மென்னடையன மல்கியொல்கிய தூமலர்ப்
பாவில்வண்டறையும் புற வார்பனங்காட்டூர் [பொய்கைப்
மேவியந்நிலை யாயரக்கன தோளடர்த்தவன் பாடல்கேட்டருள்
ஏவியபெருமான் என்பவர்க் கருளாயே. 8

அந்தண்மாதவி புன்னைநல்லவ சோகமும்மர விந்தமல்லிகை
பைந்தணாழல்கள்சூழ் புற வார்பனங்காட்டூர்
எந்திளம்முகில் வண்ணனான்முக னென்றிவர்க்கரி தாய்
[நிமிர்ந்ததொர்
சந்தமாயவனே தவத்தார்க் கருளாயே 9

நீணமார்முரு குண்டுவண்டின நீலமாமலர் கவ்விநேரிசை
பாணில்யாழ்முரலும் புற வார்பனங்காட்டூர்
நாணழிந்துழல் வார்சமணரு நண்பில்சாக்கிய ருந்நகத்தலை
ஊணாரியவனே யுகப்பார்க் கருளாயே. 10

மையினார்மணி போன்மிடற்றனை மாசில்வெண்பொடிப் பூசுமார்
பையதேன்பொழில்சூழ் புற வார்பனங்காட்டூர் [பனைப்
ஐயனைப்புக ழானகாழியுள் ஆய்ந்த நான்மறை ஞானசம்பந்தன்
செய்யுள் பாடவல்லார் சிவலோகஞ் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

தல வரலாறு :

இது தற்காலம் பனையபுரம் என வழங்குகிறது. புருவின் பொருட்டுத் தன் தசையை யரிந்திட்ட சிபிச் சக்ரவர்த்திக்கு அநுக்ரகம் செய்த தலம். இங்கு ஆண்டுதோறும் (சௌரமான) வருஷாரம்பத்திற்கு முன் மூன்று தினமும் பின் மூன்று தினமும் உதயத்தில் சூர்யபூசை. சூரியகிரணம் முன்னர்ச் சுவாமி மீதும், பின்னர்த் தேவியார்மீதும் விழுவதை யின்றுங் காணலாம். இக் கோயிலில் கல்வெட்டுக்களுமுண்டு.

சுவாமி : பனங்காட்டீசுவரர்; தேவியார்; புறவம்மை விருக்ஷம்: பனை: இதற்குப் பதிகம். 1

வழி: இத்தலம் விழுப்புரத்தை யடுத்த முண்டியம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 1 மைலில் உள்ளது.

இவ் யாத்திரையில் வழிபாட்டுக் குழுவினர் சித்த வட மடத்தை யும் தரிசித்தனர்.

சுந்தரமூர்த்தி நாயனர் திருவதிகை சமீபம் வந்தார். இது உடைய அரசு உலகேத்தும் உழவாரப் படையாளி, விடையவர்க் குக் கைத்தொணடு விரும்புபெரும் பதியாதலால் அதனை மிதித் தற்கு அஞ்சி அங்கு புகுதாதே, மடைவளர்தண் புறம்பணையில் சித்த வடமடம் புகுந்தார்.

மாலைநேரம் கழித்து இரவு வந்ததால் அம்மடத்தில் சுவாமிகள் வீரட்டானத்திறைவர் திருத்தாளை மனத்திருத்தித் துயில் கொண் டார். அதுகாலை வீரட்டேசுவரரும் அம்மடத்துள் விருத்த வேதிய ராய்ப் புகுந்து சுந்தரர் திருமுடிமீது தன் திருவடிகளை நீட்டித் துயில்கொண்டார். இதனையறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைக் குறித்துச் சினந்து "உன்னடியை என் சென்னி மிசை யேன்வைத்தாய்" என்று கேட்கச் சுவாமிகளும், "திசை யறியா வகை செய்தது என் மூப்பு' என்று சொல்லி யருளினுர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் வேறு பக்கம் சென்று பள்ளிகொண் டார். அங்கும் விருத்த வேதியராகவந்த சிவபெருமான் அவ்வாறே தன் அடிகளை யவர் முடிமீது நீட்டச் சுந்தரரும் கோபித்து "இங் கென்னைப் பலகாலும் மிதித்தனை நீயார்" என்னக் கங்கைசடைக் கரந்தபிரான் "அறிந்திலையோ" என மறைந்தார். உடனே நாயனுரும் யானறியாது இவ்வகை செய்தேன் எனத் தெளிந்து "தம்மானையறியாத சாதியாருளரே" என்னும் பதிகத்தைப் பாடி யருளினுர்'

உ
சிவமயம்

21. திருவாமாத்தூர்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

பண் - சீகாமரம் 2-ந் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

துன்னம்பெய் கோவணமுந் தோலு முடையாடை
சின்னஞ் சடைமேலோர் பிள்ளை மதிசூடி
அன்னஞ்சேர் தண்கான லாமாத்து ரம்மான்றன்
பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே. 1

கைம்மாவின் ரேல்போர்த்த காபாலி வானுலகில்
மும்மா மதிலெய்தான் முக்கணன் பேர்பாடி
அம்மா மலர்ச்சோலை யாமாத்து ரம்மானெம்
பெம்மானென் றேத்தாதார் பேயரிற் பேயரே. 2

பாம்பரைச் சார்த்தியோர் பண்டரங்கன் விண்டதோர்
தேம்ப லிளமதியஞ் சூடிய சென்னியான்
ஆம்பலம் பூம்பொய்கை யாமாத்து ரம்மான்றன்
சாம்ப லகலத்தார் சார்பல்லாற் சார்பிலமே. 3

கோணகப் பேரல்குற் கோல்வளைக்கை மாதராள்
பூணகம் பாகமாப் புல்கி யவளோடும்
ஆணகங் காதல்செ யாமாத்து ரம்மானைக்
காணத கண்ணெல்லாம் காணுத கண்களே. 4

பாட னெறிநின்றான் பைங்கொன்றைத் தண்டாரே
சூட னெறிநின்றான் சூலஞ்சேர் கையினன்
ஆட னெறிநின்று ணமாத்து ரம்மான்றன்
வேட நெறிநில்லா வேடமும் வேடமே. 5

சாமவரை வில்லாகச் சந்தித்த வெல்கணையால்
காவன் மதிலெய்தான் கண்ணுடை நெற்றியான்
யாவருஞ் சென்றேத்து மாமாத்து ரம்மானைத்
தேவர் தலைவணங்குந் தேவர்க்குந் தேவனே. 6

மாருத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேருக நில்லாத வேடமே காட்டினன்
ஆருத தீயாடி யாமாத்தூ ரம்மானைக்
கூருத நாவெல்லாங் கூருத நாக்களே. 7

தாளா லரக்கன்ருேள் சாய்த்த தலைமகன்றன்
நாளா திரையென்றே நம்பன்ற னுமத்தால்
ஆளானுர் சென்றேத்து மாமாத்தூ ரம்மானைக்
கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே. 8

புள்ளுங் கமலமுங் கைக்கொண்டார் தாமிருவர்
உள்ளு மவன்பெருமை யொப்பளக்குந் தன்மையதே
அள்ளல் விளைகழனி யாமாத்தூ ரம்மானெம்
வள்ளல் கழல்பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே. 9

பிச்சை பிறர்பெய்யப் பின்சாரக் கோசாரக்
கொச்சை புலானற வீருரிவை போர்த்துகந்தான்
அச்சந்தன் மாதேவிக் கீந்தான்ற னுமாத்தூர்
நிச்ச னினையாதார் நெஞ்சமு நெஞ்சமே. 10

ஆட லரவசைத்த வாமாத்தூ ரம்மானைக்
கோட லிரும்புறவிற் கொச்சை வயத்தலைவன்
நாட லரியசீர் ஞானசம் பந்தன்றன்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம் 2-ங் திருமுறை

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலை நாணராவரி வாளிகூரெரி காற்றின்மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்றலார்மணி மாடமாளிகை சூளிகைக்கெதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில்வந்தணையு மாமாத்தூ ரம்மானே. 1

பரவிவானவர் தானவர்பல ருங்கலங்கிட வந்தகார்விடம்
வெருவ வுண்டுகந்த வருளென்கொல் விண்ணவனே
கரவின்மாமணி பொன்கொழித்திழி சந்துகாரகி றந்துபம்பைநீர்
அருவி வந்தலைக்கு மாமாத்தூ ரம்மானே. 2

நீண்டவார்சடை தாழநேரிழை பாடநீறுமெய் பூசிமாலயன்
மாண்ட வார்சுடலை நடமாடு மாண்பதுவென்
பூண்டகேழன் மருப்பராவிரி கொன்றைவாள்வரி யாமைபூணென
ஆண்ட நாயகனே யாமாத்தூ ரம்மானே. 3

சேலினேரன கண்ணிவெண்ணகை மான்விழித்திரு
மாதைப்பாகம்வைத்
தேல மாதவ நீமுயல்கின்ற வேடமிதென்
பாலினேர்மொழி மங்கைமார்நட மாடியின்னிசை பாடநீள்பதி
ஆலை சூழ்கழனி யாமாத்தூ ரம்மானே. 4

தொண்டர்வந்து வணங்கிமாமலர் தூவிநின்கழ லேத்துவாரவர்
உண்டியால் வருந்த விரங்காத தென்னைகொலாம்
வண்டலார்கழ னிக்கலந்து மலர்ந்ததாமரை மாதர்வாண்முகம்
அண்டவாணர் தொழு மாமாத்தூ ரம்மானே. 5

ஓதியாரண மாயநுண்பொரு ளன்றுநால்வர்முன் கேட்கநன்னெறி
நீதி யாலநீழ லுரைக்கின்ற நீர்மையதென்
சோதியேசுடரே சுரும்பமர் கொன்றையாய்திரு நின்றியூருறை
ஆதியே யரனே யாமாத்தூ ரம்மானே. 6

மங்கைவா ணுதன்மான் மனத்திடைவாடியூட மணங்கமழ்சடைக்
கங்கையா ளிருந்த கருத்தாவ தென்னைகொலாம்
பங்கயமது வுண்டுவண்டிசை பாடமாமயி லாடவிண்முழ
வங்கையா லதிர்க்கு மாமாத்தூ ரம்மானே. 7

நின்றடர்த்திடு மைம்புலன்னிலை யாதவண்ண நினைந்துளத்திடை
வென்றடர்த் தொருபான் மடமாதை விரும்புதலென்
குன்றெடுத்த நிசாசரன்றிர டோளிருபது தானெரிதர
அன்றடர்த் துகந்தா யாமாத்தூ ரம்மானே. 8

செய்யதாமரை மேலிருந்தவ னோடுமாலடி தேடநீண்முடி
வெய்ய வாரழலாய் நிமிர்கின்ற வெற்றிமையென் [கொண்டு
தையலாளொடு பிச்சைக்கிச்சை தயங்குதோலரை யார்த்தவேடங்
ஐய மேற்றுகந்தா யாமாத்தூ ரம்மானே. 9

புத்தர்புன்சம ணுதர்பொய்ம்மொழி நூல்பிடித்தலர் தூற்றநின்னடி
பத்தர் பேணநின்ற பரமாய பான்மையதென்
முத்தைவென்ற முறுவலாளுமை பங்கனென்றிமை போர்பரவிடும்
அத்தனே யரியா யாமாத்தூ ரம்மானே. 10

வாடல்வெண்டலை மாலையார்த்து மயங்கிருள்ளெரி யேந்திமாநடம்
ஆடன் மேயதென்னென் ருமாத்தூ ரம்மானைக் [தன்
கோடனுக மரும்பு பைம்பொழிற் கொச்சையாரிறை ஞானசம்பந்
பாடல் பத்தும்வல்லார் பரலோகஞ் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனர்

ஐந்தாந் திருமுறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

மாமாத் தாகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியுங் காண்கிலர் தாண்முடி
ஆமாத் தூரர னேயரு ளாயென்றென்
றேமாப் பெய்திக்கண் டாரிறை யானையே. 1

சந்தி யானைச் சமாதிசெய் வார்தங்கள்
புந்தி யானைப்புத் தேளிர் தொழப்படும்
அந்தி யானை யாமாத்தூ ரழகனைச்
சிந்தி யாதவர் தீவினை யாளரே.

காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவேன்
ஆமாத் தூரர னேயென் றழைத்தலும்
தேமாத் தீங்கனி போலத்தித் திக்குமே. 3

பஞ்ச பூத வலையிற் படுவதற்
கஞ்சி நாணுமா மாத்தூ ரழகனை
நெஞ்சி னுனினைந் தேனினை வெய்தலும்
வஞ்ச வாறுகள் வற்றின காண்மினே. 4

குராம னுங்குழ லாளொரு கூறனுர்
அராம னுஞ்சடை யான்றிரு வாமாத்தூர்
இராம னும்வழி பாடுசெய் யீசனை
நிராம யன்றனை நாளு நினைமினே. 5

பித்த னைப்பெருந் தேவர் தொழப்படும்
அத்த னையணி யாமாத்தூர் மேவிய
முத்தி னையடி யேனுண் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே. 6

நீற்றி னார்திரு மேனிய னேரிழை
கூற்றி னான்குழற் கோலச் சடையிலோர்
ஆற்றி னானணி யாமாத்தூர் மேவிய
ஏற்றி னானெமை யாளுடை யீசனே. 7

பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகு மமுதினை யாமாத்தூர்
சண்ணிப் பானைத் தமர்க்களித் தாயதோர்
கண்ணிற் பாவையன் னானவன் காண்மினே. 8

குண்டர் பீலிகள் கொள்ளுங் குணமிலா
மிண்ட ரோடெனை வேறு படுத்துய்யக்
கொண்ட நாதன் குளிர்புனல் வீரட்டத்
தண்ட னாரிட மாமாத்தூர் காண்மினே. 9

வானஞ் சாடு மதியர வத்தொடு
தானஞ் சாதுடன் வைத்த சடையிடைத்
தேனஞ் சாடிய தெங்கிள நீரொடும்
ஆனஞ் சாடிய வாமாத்தூ ரையனே. 10

விடலை யாய்விலங் கல்லெடுத் தான்முடி
அடர வோர்விர லூன்றிய வாமாத்தூர்
இடம தாக்கொண்ட வீசனுக் கென்னுளம்
இடம தாகக்கொண் டின்புற் றிருப்பனே. 11

திருச்சிற்றம்பலம்.

ஆருந்திருமுறை - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

வண்ணங்க டாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையா னம்மைக்
கண்ணம்பா னின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்க டாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 1

வெந்தார்வெண் பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரந் தாமுரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீ ரூரே தென்றேன்
நொந்தார்போல் வந்தென தில்லே புக்கு
நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தா மரைமே லளிவண் டியாழ்செய்
ஆமாத்தூ ரென்றடிகள் போயி னாரே. 2

கட்டங்கந் தாமொன்று கையி லேந்திக்
கடிய விடையேறிக் காபா லியார்
இட்டங்க டாம்பேசி யில்லே புக்கு
இடும்பலியு மிடக்கொள்ளார் போவா ரல்லர்
பட்டிமையும் படிறுமே பேசா நின்றார்
பார்ப்பாரைப் பரிசழிப்பார் போல்கின் றார்தாம்
அட்டியசில் பலியுங் கொள்ளார் விள்ளார்
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 3

பசைந்தபல பூதத்தர் பாட லாடல்
படநாகக் கச்சையர் பிச்சைக் கென்றங்
கிசைந்ததோ ரியல்பின ரெரியின் மேனி
இமையாமுக் கண்ணினர் நால்வே தத்தர்
பிசைந்ததிரு நீற்றினர் பெண்ணோர் பாகம்
பிரிவறியாப் பிஞ்ஞகனார் தெண்ணீர்க் கங்கை
அசைந்ததிரு முடிய ரங்கைத் தீயர்
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 4

உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றிருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்க டொழுதேத்து மிறைவ னார்தாம்
பொருளுடைய ரல்ல ரிலரு மல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ் சூழ
அருளுடைய வங்கோதை மாலை மார்பர்
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 5

வீறுடைய வேறேறி நீறு பூசி
வெண்டோடு பெய்திடங்கை வீணை யேந்திக்
கூறுடைய மடவாளோர் பாகங் கொண்டு
குழையாடக் கொடுகொட்டி கொட்டா வந்து
பாறுடைய படுதலையோர் கையி லேந்திப்
பலிகொள்வா ரல்லர் படிறே பேசி
ஆறுடைய சடைமுடியெம் மடிகள் போலும்
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 6

கையோர் கபாலத்தர் மானின் றோலர்
கருத்துடையர் நிருத்தராய்க் காண்பார் முன்னே
செய்ய திருமேனி வெண்ணீ றாடித்
திகழ்புன் சடைமுடிமேற் றிங்கள் சூடி
மெய்யொரு பாகத் துமையை வைத்து
மேவார் திரிபுரங்கள் வேவச் செய்து
ஐயனார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 7

ஒன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றொற்றியூ ரும்மூரே யுணரக் கூறீர்
நின்றுதா னென்செய்வீர் போவி ராகில்
நெற்றிமேற் கண்காட்டி நிறையுங் கொண்டீர்
என்றுந்தா னிவ்வகையே யிடர்செய் கின்றீர்
இருக்குமூ ரினியறிந்தோ மேகம் பமோ
அன்றித்தான் போகின்றீர் அடிக ளெம்மோடு
அழகியரே யாமாத்தூ ரைய னாரே. 8

கல்லலகு தாங்கொண்டு காளத் தியார்
கடிய விடையேறிக் காணக் காண
இல்லமே தாம்புகுதா விடுமின் பிச்சை
யென்ருருக் கெதிரெழுந்தே னெங்குங் காணேன்
சொல்லாதே போகின்றீ ரும்மூ ரேது
துருத்தி பழனமோ நெய்த்தா னமோ
அல்லலே செய்தடிகள் போகின் றீர்தாம்
அழகியரே யாமாத்தூ ரைய னுரே. 9

மழுங்கலா நீருடு மார்பர் போலும்
மணிமிழலை மேய மணுளர் போலும்
கொழுங்குவளைக் கோதைக் கிறைவர் போலும்
கொடுகொட்டி தாள முடையார் போலும்
செழுங்கயி லாயத்தெஞ் செல்வர் போலும்
தென்னதிகை வீரட்டஞ் சேர்ந்தார் போலும்
அழுங்கினு ரையுறவு தீர்ப்பார் போலும்
அழகியரே யாமாத்தூ ரைய னுரே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனுர்

7-ந் திருமுறை பண்கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

காண்டனன் காண்டனன் காரிகைய யாடன் கருத்தனுய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத் தூரெம் அடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே.

பாடுவன் பாடுவன் பார்ப்பதி தன்னடி பற்றிநான்
தேடுவன் தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூரெம் மடிகளைக்
கூடுவன் கூடுவன் குற்றம தற்றென் குறிப்பொடே. 2

காய்ந்தவன் காய்ந்தவன் கண்ணழ லாலன்று காமனைப்
பாய்ந்தவன் பாய்ந்தவன் பாதத்தி னுலன்று கூற்றத்தை
ஆய்ந்தவன் ஆய்ந்தவன் ஆமாத் தூரெம் மடிகளார்
ஏய்ந்தவன் ஏய்ந்தவன் எம்பி ராட்டியைப் பாகமே. 3

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள் ளேநின்ற தண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோன் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத் தூரையன் அருளதே. 4

வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர் தங்களைச்
சென்றவன் சென்றவன் சில்பலிக் கென்று தெருவிடை
நின்றவன் நின்றவன் நீதி நிறைந்தவர் தங்கள்பால்
அன்றவன் அன்றவன் செய்யருள் ஆமாத்தூ ரையனே. 5

காண்டவன் காண்டவன் காண்டற் கரிய கடவுளாய்
நீண்டவன் நீண்டவன் நாரணன் நான்முக னேடவே
ஆண்டவன் ஆண்டவன் ஆமாத் தூரையு மெனையுமாட்
பூண்டவன் பூண்டவன் மார்பிற் புரிநூல் புரளவே. 6

எண்ணவன் எண்ணவன் ஏழுல கத்துயிர் தங்கட்குக்
கண்ணவன் கண்ணவன் காண்டுமென் பாரவர் தங்கட்குக்
கண்ணவன் வண்ணவன் மேனியோர் பாகமாம் பிஞ்ஞகன்
அண்ணவன் அண்ணவன் ஆமாத் தூரெம் மடிகளே. 7

பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந் தென்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தி னுட்பொரு ளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத் தூரையனை யார்வத்தால்
என்னவன் என்னவன் எனமனத் தின்புற் றிருப்பனே. 8

தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூரெம் மடிகளே. 9

உற்றனன் உற்றவர் தம்மை யொழிந்துள்ளத் துள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச் சேவடிக் கேசெல்ல
அற்றனன் அற்றனன் ஆமாத்தூர் மேயான் அடியார்கட்காள்
பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும்
பிறவாமைக்கே. 10

ஐயனை யத்தனை ஆளுடை யாமாத்தூர் அண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொரு ளான விமலனை
மையனை மையணி கண்டனை வன்றொண்ட னூரன்சொல்
பொய்யொன் றுமின்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

தலவரலாறு

இத்தலம் வடமொழியில் கோமாதுருபுரம் என வழங்கப் பெறும். பசுக்கள் சிவபெருமானைப் பூசித்துத் தமக்கு அவனைக் காப்பாகக் கொண்ட தலம். இராமபிரான் பூசித்த வரலாறு திருநாவுக்கரசு நாயனார் திருக்குறுந்தொகைப் பதிகத்தின் 5 வது திருப்பாட்டு அறிவிக்கின்றது. சுவாமிசந்நிதி கிழக்குப் பார்த்ததும், தேவியார் சந்நிதி மேற்குப் பார்த்ததுமாக விளங்குகின்றன. பிருங்கிமுனிவர் சத்தியை யிகழ்ந்த காரணத்தால் தனக்கேற்பட்ட சாபத்தை இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்துச் சாபம் நீங்கப் பெற்றனர். இங்கு புலவர் புராணம் முதலிய நூல்களை யியற்றிய முருகதாசர் என வழங்கும் தண்டபாணிச்சுவாமிகள் வசித்த பெருமையையுமுடையது என்பர். இதற்குப் பதிகம் 5 .

சுவாமி பெயர்: அழகு காதலர்; அபிராமேசுவரர்;

தேவியார்: அழகியநாயகி; முத்தாம்பிகை; தீர்த்தம்: பம்பை: விருக்ஷம்; வன்னி.

வழி: இத்தலம் விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே யட்சாலையில் 3 மைலில் உள்ளது.